உ

மஹாகதேவ்யைநம:

திருப்பத்தூர்கங்காணவீதி

# கன்னனூர்-மாரியம்மன்பதிகம்,

ஊசல், எச்சரிக்கை, சந்தவிருத்தம்,

லாலி, மங்களம்.

திருப்போரூர்

## டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதராஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் என். சி.

1914.

# விளம்பரம்.

## அற்புத பூலோகரம்பை கதை.

இதனால் சகலமான கனவான்களுக்கும் தெரிவிப்பது யாதெனில், இதுவரையிலும் வெளிவந்திருக்கும் அராபிக்கதை, பாரீஸ்கதை, குலோபகாவலிகதை நான்குபக்கிரிகள் கதை இன்னும் சில சக்கிரவர்த்திகள் கதை முதலானதும் அவரவர்கள் வாசித்தும் பிறரால் சொலக்கேட்டும் இருப்பீர்கள் ஆகையால் ஷை கதைகளைப்போன்ற ஆயிரம்கதைகளை ஒன்றுய்த்திரட்டி உருக்கிவார்த்ததைப்போல் இப்போது ஏற்படுத்தியிருக்கும் (அற்புத பூலோகரம்பைகதை என்னும் தலைப்புபெயர்கொண்ட ஷை கதையானது மானிடமென்னும் நமது அருமையான பிறவிக்கு கற்பகத்தருவைப்போல் கிடைத்திருக்கிறதென்றறிக இக்கதையை தாங்களே படித்தாவது பிறரால் சொல்லவாவது கேட்பீர்களாகில் இரும்பைக் காந்தமிழுக்கும் பாவனைபோல் ஐம்புலன்களையும் தன்வசத்தில் கிரகித்துக்கொள்ளுவதுமன்றி ஆனந்தபரவசமாய் அவரவர் மனதை உருகச்செய்யுமென்பது திண்ணம் மேலும் இதில் அடங்கிய சாரம்சங்களை விவரிக்குமிடத்து மகா அற்புதமாயிருக்கும் அதாவது.

ஐயாவே! இந்தக்கதையில் ஆங்காங்கு சந்திக்கும் நவரச அலங்காரங்களை முற்றும் விவரித்தெழுத இடமில்லாமையால் இம்மட்டில் விடப்பட்டது. கிளேஸ்காகிதத்தில் உயர்ந்த பயிண்டு செய்தது.

இதன் விலை ரூபா. 1 0 0.



# சா ற் று க வி,

———(*)———

திருப்பற்றார்-சொரூபானந்தஸ்வாமிகள்
மாணாக்கரிலொருவராகிய
செங்குந்தரில்-ம-ா-ா-ஸ்ரீ,
கு-முனிசாமிமுதலியாரவர்களால்
இயற்றியது.

———

கட்டளைக்கலித்துறை.

தோரணிமாடத் திருவைகங்காணத் தெருவினருட்
காரணிகன்ன புரமாரியம்மை கவின் றமிழிங்
காரணிவேணி யடியவர் தம்மை யரனெனவுன்
சேரணியன்பர் குமாரசுவாமி யியற்றினரே.

உ

கடவுள் துணை.

மஹாதேவ்யைநம:

திருப்பத்தூர் கங்காணவீதி

# மாரியம்மன் பதிகம்.

## விநாயகர் காப்பு.

### நேரிசை-வெண்பா.

வித்தைதரும் புத்திதரும் மேன்மை தருஞ்சகல
வித்தைத் தருக்ககற்று மெய்ஞ்ஞான-வித்தைதரு
மானைமுகத் தானுலகந் தாவென் றருட்கனிகொள்
ளானைமுகத் தான்பொன் னடி.

## நூல்.

### பதினான்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சீர்கொண்ட வளசகண படலிவிக சிதவதன
திவ்யசந் திரமண்டலி
செங்குமுத விதழிதழி கோடிபாஸ்கர சுந்தர
தேஜோ மயஸ்வரூபி

நீர்கொண்ட வுத்பல விலோசனி மாசுண
 நெருங்கமித குணபூஷணி
நிர்மலி யகோரிசங் கரிகௌரி யாநந்தி
 நித்யகல் யாணரமணி
பார்கொண்ட வுதரவட பத்திரி யபீதகுஜ
 பம்பரீ சூலடமர
பங்கய கபாலதர பாணிநூ புரசரணி
 பஷ்மபாண் டரவிக்ரஹீ
கார்கொண்டநின்கடைக் கண்டாக்கெமக்குலக
 கங்காண வீதிமருவுங்
ககனசுர வந்திதயு களபத்ம தளசரண
 கன்னபுர மாரியுமையே. (௮)
சாந்தமெனுமனையவளு மில்லைமிகுபொறுமையென்
 றனையர்களை பெறவுமில்லை
தருமமென்சோதரரு மில்லைபிறவுயிர்கண்மேற்
 றயவென்னு நண்பரில்லை
வாய்ந்தமெய்ஞ்ஞானமென் றந்தையிலையாலிந்த
 மகிதலத் தாருமில்லா
மகவென்ன வாடினேன் சத்யமா கியவெனது
 மாதாநீ காக்கல்வேண்டும்
பாந்தளா லங்க்ருதி கட்ககே டகசக்ர
 பாஞ்சசன்ய சுபாணினி
பத்முக சுரலோக வனிதகண பூஷித
 பரமசுக கரிசங்கரி

காந்தளங்கரதலி கரணஹர தாபதர
கங்காண வீதிமருவுங்
ககனசுர வந்திதயு களபத்ம தளசரண
கன்னபுர மாரியுமையே. (௨)
அருமையா கியமனித சடலம் படைத்தனை
யம்மணி யதிலாம்பய
னருளுடைமை யல்லாவா விருவினை விலங்கிட
டவாவெனுஞ் சிறையறையிலே
யிருமைதரு மும்மலக் கயிறுற் பிணிப்புண்
டிலாஞான சுதவமுடி
யேழைக் கனந்தயா நினைவொடு மறப்பென்னு
மிரவுபக லாயதிந்த
வரமதனை படவெனுன் முடியாது முடியாது
வரதாபை யஸ்தமலரி
மங்களா கரகாம கோடியே காம்பர
வாமசிவ காமநிமலி
சருமயிட மர்த்தனி துரியநிலை தன்னிலுல
சங்காண வீதிமருவுங்
ககனசுர வந்திதயு களபத்ம தளசரண
கன்னபுர மாரியுமையே. (௫)
பூதல வியோமமென் றியசித்ர விச்சித்ர
பூரண நிகேதனத்துட்
பொன்முத்து மாரிநின் கண்சந்த்ர சூரியர்கள்
புயமட்ட திசையுடுக்கு

மாதுகி னெடுங்கட லனந்தாதி சர்பமுன்
மார்பினிடை புரளுமணிகண்
மாருதமெலாஞ்சிற் றுயிர்ப்பெறி தரும்பிராண
வாய்வொன்று மிணையிங்கிலா
சீதள முகாரவிந் தம்பர வெளிப்புய
கிருக்கொங்கை யமுதமுண்டு
சிவகோ டிகளெலா முய்கின்ற தாகநின்
சிற்சொரூ பங்கண்டவர்
காதுமல மாயைக் கடந்தா ரெனச்சொலுல
கங்காண வீதிமருவுங்
ககனசுர வந்திதயு களபத்ம தளசரண
கன்னபுர மாரியுமையே. (௬)
எண்ணிலே யிலேயென்ற பிறவிதுய ரறியாத
வேழையா யுழலுநாயே
னென்றாலு நல்லனே நல்லவர்க ணன்மொழிக
ளெட்டியிலு மெட்டியானுன்
மண்ணிலே பெண்ணிலே பொன்னிலே யென்றசிறு
மாற்றமென் செவிவாயிலே
மணநாறு முக்கனி பிழிந்திரத மூற்றுமா
மறுமையிலு முயல்வதுண்டா
ஒண்ணிலே நின்றபல லீலாவி னோதநீ
யோங்கார பீஜாக்ஷிரி
யுரககண கங்கணி யிங்குலிக வங்கணி
யோநமோ நாராயணி

கண்ணிலே யனவரத மகலாத மேலவர
கங்காண வீதிமருவுங்
ககன சுர வந்திதயு களபத்ம தளசரண
கன்னபுர மாரியுமையே. (௲)
நீட்டிவலி தள்ளிய நெடுங்கயிற் றாசனு
நீரவா ரிதியலைகளு
நீணிற விசும்பள வெழுந்தல மருங்காலு
நிலையிலாக் கானனீரு
மாட்டம் பயிற்சிறுவ ரங்கையி னறைப்பந்து
மம்மவென் பிறவியுன்னி
லற்பமா மிதுமகத் தணுவணு மகத்தாகு
மதார சத்தியுன்னு
ணட்டமொரு மூன்றுடைய ருத்ரசாமளவர்ண
ரஞ்சனி தவளபத்ம
ரக்தகம லாசனி சிம்மவா ரோகணி
நளினமா விகதாரணி
காட்டியருணிதியென்ன நின்னையேசொலுமுலக
கங்காண வீதிமருவுங்
ககனசுர வந்திதயு களபத்ம தளசரண
கன்னபுர மாரியுமையே. (௬)
பஞ்சவிட யங்களையு மெந்தனுக் காகப்
படைத்தனை யுனதுதன்மப்
பரிபவம் பொறிகளின் மீதேது தோஷமும்
பார்க்கிலது சடமாகுமே

வஞ்சஞ் செயும்புலமை தென்னிலோ காரணமென்
வல்லவர்க் கேவலாளா
மனமாதி காரணமொரு கணநேர நிற்கிலருள்
வாழ்வுதரு மென்னிலதுவுந்
தஞ்சமென நின்முக மிருத்தலா லவ்வருட்
சத்திநீ தயைசெய்குவாய்
தமருத்ர விஷ்ணுஞ் சுதாதார பரஜீவ
சாக்ஷிவெகு ஜனதாக்ஷணி
கஞ்சுக விபூதிருத் ராக்ஷதா ரணியுலக
கங்காண வீதிமருவுங்
ககனசுர வந்திதயு களபத்ம தளசரண
கன்னபுர மாரியுமையே. (எ)
மழைமறந் தாலீர மறறுலர்ந் தண்ணூந்து
வாடுநற் பயிரென்செயு
மாதா மறந்துவிடி லழுதழு துறங்குசிறு
மக்கடா னென்செய்குவார்
தழைவுதரு மண்டங்க ளத்தனையு மீன்றவென்
றாய்நீ மறந்துவிட்டாற்
றமியனே னுய்வனோ கற்று வெனத்தேடி
தற்காத்த லுனதுகடமை
விழைவொடு முஷக்கா லை பாலைமாத் யந்தருணி
வ்ருத்தைநீ யந்திபொழுதில்
வேதாந்த சுகதன்ம போகசுந் தரிசர்வ
வ்யாபகி வெகுபாவகி

கழையுறழு மெண்டோ ளலங்க்ருதி யான்றவர
கங்காண வீதிமருவுங்
ககனசுர வந்திதயு களபத்ம தளசரண
கன்னபுர மாரியுமையே. (அ)
தற்போத மாகியொரு சம்பந்த மில்லாத்
தனத்தைத் தனத்திலுண்டாஞ்
சகலவிடயங்களை மதரரிக் கண்கண்மடத்
தையலரை யவர்களிடமா
யெற்போலி யாய்வந்த மக்களைத் துணைகருவி
யென்னவரு மனையப்பனை
யீடனை களைக்கூட மாடமா விகைதன்னை
யெனதென்று மைம்பூதமாம்
பொற்பா லமைந்தமல மாயா தனுத்தன்னை
புன்மையா ஞென்றிலாப்
பொய்யைமெய் யென்றதாற் பொய்யாய் முடிந்தவருள்
போதமுற லென்றனம்மா
கற்பார்கள் கற்பவை யெலாங்கற்ற மேலேவா
கங்காண வீதிமருவுங்
ககனசுர வந்திதயு களபத்ம தளசரண
கன்னபுர மாரியுமையே. (கூ)
மன்கனே வைத்தமன விச்சைமேற் றேடமும்
வறுமையொடு சிறுமைதரவே
வள்ளலா நிற்கின்ற தனமீது வைத்ததொரு
மனதோட மொடுநேசமாய்ப்

பண்கனே கோகில மெனத்திரண் டீரடி
பரந்திளகி யிம்முழுலையைப்
பந்தென்ன விலவிதழி னூறலமு தென்னவிப்
பாவியேன் கண்டுதுதிசெய்
பெண்கணேவைத்தமன விச்சையின்றேலதன்
பேரேது தோடமேது
பெற்றவெனதன்னேயே பிழைமொழி யிதல்லலீ
பெண்ணல்லை யாணுமல்லை
கண்கணேநின்றசிறு பாவையென மேல்வர
கங்காண வீதிமருவுங்
ககனசுர வந்திதயு களபத்ம தளசரண
கன்னபுர மாரியுமையே (ய)
வேதரசமொண்டுண்டு றங்காது றங்குதவ
மேலவர கங்காணவவ்
வீதிமரு வுங்கன்ன புரமாரி பதிகம்
விளம்பினோர் கேட்டுணர்ந்தோர்
தீதரச கன்றுமன மிம்மையே சுகுணமுள
திருவனைய மனைவிவாய்த்துச்
செல்வர்களை யும்பெற்று தனகனக மெய்திநோய்த்
தேகமில ராய்நுகர்ந்து
போதரச மாகின்ற சத்திசா ரூபப்பொ
ருந்திமறு மையும்வாழவே
புண்ணிய பலன்றருந் திருப்பற்று மூர்கணே
புக்கிருந் தெங்கண் ணுமீங்

காதரம் வளர்க்கின்ற தர்யென்ன மேலவர
கங்காணை வீதிமருவுங்
ககனசுர வந்திதயு களபத்ம தளசரணை
கன்னபுர மாரியுமையே. (கக)

---

## ஊஞ்சல்.

—(*)—

காரிலங்குங்கடலமுதமனையதான
கருணாகடாக்ஷமெனும் கனம்பெற்றோங்க
காரிலங்குங்கணங்களுனதடிகளேற்றி
நாககங்கணிவரதியாளியூர்தி
சூரிலங்குந்தாருகவினாசினீலி
துர்க்கையாமளையென்றுன்றுதிகொண்டாடுஞ்
சீரிலங்குங்கங்காணவீதிமேவும்
ஸ்ரீகன்னபுரமாரியாடிரூசல். (க)
தூலமிகும்புவிபீடமீதிலட்ட
சுத்தகுலாசலமென்னுங்கால்கணாட்டி
காலமிகுந்தாரகைபாமுத்தங்கோத்த
ககனமெனுஞ்சித்திரவிதானந்தூக்கி
மூலமிகுநிருமலனூல்வடங்கள்பூட்டி
முழுதமைந்தபொன்னூசன்மீதிலேறி
சீலமிகுங்கங்காணவீதிமேவும்
ஸ்ரீகன்னபுரமாரியாடிரூசல். (உ)

நவதன்மத்தாற்புரிந்ததலைக்கோலங்க
ணன்கமைத்துநெற்றியிலோர்திலதஞ்சாத்தி
தவதன்மக்காதணிகளனந்தஞ்சோதி
சாருமிளஞ்சூரியன்போற்றளதளென்ன
பவதன்மம்போக்குமிருசரணந்தன்னில்
பாடகந்தண்டைச்சிலம்புகலகலென்ன
சிவதன்மக்கங்கணவீதிமேவும்
ஸ்ரீகன்னபுரமாரியாடிரூசல். (௫)
கனகரமணியமானவாடைசூடிக்
காசினியெலாமுண்டுந்தளர்விலாத
தனகனக்கும்பங்களழகுகாட்ட
தாங்குபெருங்கச்சிறுக்கியினமணந்தம்
பனகவருங்கங்கணங்களத்தம்பூண்டு
பணியாகச்சிரமணியுளரவம்பூண்டு
சினகரஞ்சேர்கங்காணவீதிமேவும்
ஸ்ரீகன்னபுரமாரியாடிரூசல் (௬)
ஒருகரத்திற்றிரிசூலமொளிரத்தாங்கி
யொருகரத்திலுடமரகமோர்த்தொலிப்பத்தாங்கி
மருகரத்தில்வீரவாள்வயங்கத்தாங்கி
வாமகரந்தனிலட்சமாலைதாங்கி
யிருகரங்களபயமொடுவரதமாக்கி
யிருகரத்திற்றிருவாழிசங்கந்தாங்கி
திருகரமார்கங்காணவீதிமேவும்
ஸ்ரீகன்னபுரமாரியாடிரூசல். (௭)

தாமமுறுமளகவபிராமிசூல
　தரவுக்ரகாளியுமேவடந்தொட்டாட்ட
நேமமுறுமிந்த்ராணிமாதினோடு
　நேசநாராயணியும்வடந்தொட்டாட்ட
கோமளஞ்சேர்கௌமாரியரிவராகி
　கூறுமகேஸ்வரியுடனேவடந்தொட்டாட்ட
சேமமுறுங்கங்காணவீதிமேவும்
　ஸ்ரீகன்னபுரமாரியாடிரூசல். (௬)
தூசுபெறுந்தரளவகைதுலங்கியாட
　சுந்தரமாகியமுகத்தின்சோதியாட
பாசுபெறுந்தோளிலிடுமாலையாட
　பணிபினங்களெண்ணிறந்தபடங்கொண்டாட
காசுபெறுமாபரணகணங்களாட
　காயமுள்ளார்தேயமுள்ளார்களித்தங்காட
தேசுபெறுங்கங்காணவீதிமேவும்
　ஸ்ரீகன்னபுரமாரியாடிரூசல். (எ)
கோவைசெயுந்திருவதரதேவமாதர்க்
　கூட்டமெலாமுன்கொலுவில்வந்துகூடி
பாவைசெயுமொருபாதுதீபமேந்த
　பாங்கரொருகன்னிகையாளாலமேந்த
காவலைசயவொருமங்கைவாழிகூற
　நாரியர்களிருபுரமுங்கவரிவீச
சேவைசெயுங்கங்காணவீதிமேவும்
　ஸ்ரீகன்னபுரமாரியாடிரூசல். (அ)

பல்வளமுங்கொன்றேனதுகோலங்கொண்டு
　　பாரோரும்விண்ணோருங்கரங்கள்கூப்பி
சொல்வளநன்னாவலர்களான்முன்னோருந்
　　தோத்திரத்துந்தங்கடங்கடியரங்கூறி
வல்வடிகன்றனைப்பெபற்றமாரிசூரி
　　மாதங்கியெனவேவரும்வரங்கள்கேட்ப
செல்வமிகுங்கங்காணவீதிமேவும்
　　ஸ்ரீகன்னபுரமாரியாடிரூசல். (சு)

ஒருப்பற்றுமில்லாதமுனிவர்வாழி
　　உயர்ந்தகுலத்தவர்வாழிவேள்விவாழி
கருப்பெற்றேபெய்யுமுகிலினங்கள்வாழி
　　காசினியையாளுகின்றவேந்தர்வாழி
விருப்புற்றேயிவ்வூசல்படிப்போர்வாழி
　　வேண்டியகமுறக்கேட்டமேலோர்வாழி
திருப்பற்றார்கங்காணவீதிவாழி
　　ஸ்ரீகன்னபுரமாரிவாழிவாழி. (எ)

# எச்சரிக்கை.

பூதாரகமாணயதன்பொருளாயினைவடுகன்
மாதாவுனையல்லாவினிவந்தாள்பவரிலேயே
பாதாம்புயமருளுந்திருப்பற்றாரகங்காண
போதாரணுந்தெருவாழ்கன்னபுரமாரியெச்சரிக்கை. (க)

ஓங்காரமுள்ளுடோங்ககங்காரிமவ்வகாரி
ரீங்காரமுமாளுயுடனீந்துங்கபாலி
பாங்காகியவளமார்திருபற்றாரகங்காண
பூங்காவணதெருவாழ்கன்னபுரமாரியெச்சரிக்கை. (௨)
பாசம்மொருமூன்றுறியபடிவம்பெறவேண்டி
ஆசைப்புரிவேனுனெனவறியாதநீயலேயே
தேசத்தவர்புகழுந்திருப்பற்றாரகங்காண
பூசைச்செயுந்தெருவாழ்கன்னபுரமாரியெச்சரிக்கை. ()
சிங்கந்தனையூர்ந்தேவெகுஜெயசம்பவமாக
வெங்கும்பொருணீயாயினையெந்தாயருடந்தாள்
தெங்கின்றருவணியார்திருப்பற்றாரகங்காண
பொங்குந்தெருவமர்ந்தாய்கன்னபுரமாரியெச்சரிக்கை ()
முன்னாள்செயும்பயனுன்மிகுமோகந்தகனுனேன்
அன்னுவிதுசமயம்மருளாளாய்மலர்த்தாளால்
பன்னுடவர்புகழுந்திருபற்றாரகங்காண
பொன்னுன்மலிதெருவாழ்கன்னபுரமாரியெச்சரிக்கை ()
மகிழேந்தியவபிதானங்கொண்மாரியகங்காரி
திகழேந்தியவாளாயுததேவியெனதாவி
அகழேந்தியவரணார்திருப்பற்றாரகங்காண
புகழேந்தியதெருவாழ்க்கன்னபுரமாரியெச்சரிக்கை. ()
கனியாமனங்களிந்தேபுனைக்கருதித்தொருநிலயா
லினிதேந்துணரடிகாண்டலுமேமேனுமனங்காணேன்
பனிதண்டலைசூழுந்திருப்பற்றாரகங்காண
புனிதம்பெறுதெருவாழ்கன்னபுரமாரியெச்சரிக்கை. (எ)

புலிவாகனவாரோகணப் பொருளேதிருவருளே
நலியாவணமென்னையாள் சிவநாரீசுகவாரீ
சிலையேந்தணனெறியார்திருப்பதற்றாரகங்காண
பொலிவாகியதெருவாழ்கன்னபுரமாரியெச்சரிக்கை. ()

---

# சந்தம்.

—(*)—

சங்கரிகௌரிசூலி ஜடதாரிதறுகட்கோர
வெங்கமுமயிற்செற்ற வேதவேதாந்தவீரி
தெங்கருங்கானச் சூழறிருநகரமர்ந்தசெல்வி
யங்கரசூலியெம்மை யாண்டகௌமாரிக்கண்ணே. (க)

நாரணிநாரணன்றன் றங்கையேநாமரூப
காரணமொன்றில்லாத கன்னியாமலைமாதங்கி
சீரணவர்ரணச்சூழ றிருநகரமர்ந்தசெல்வி
யாரணியாயியெம்மை யாண்டகௌமாரிக்கண்ணே. (உ)

இரணியற்கிண்டநார சிங்கத்தினிரணங்கண்ட
சரணவெண்புட்பாயங்க்ரா சத்திசாமலைமாதேவி
திரணமும்வாய்மைகுன்றுத் திருநகரமர்ந்தசெல்வி
பரனெனக்கருதுமெம்மை யாண்டகௌமாரிக்கண்ணே.

மந்திரப்பொருளேசர்ப்ப மாலிகாபரணம்பூண்ட
சுந்தரிபவத்துளீர்க்குந் தொடர்பெலாமாற்றிக்கிர
சிந்தரிக்கிளையாவென்றுந் திருநகரமர்ந்தசெல்வி
யந்தரிநிமலியெம்மை யாண்டகௌமாரிக்கண்ணே. (௪)

வண்டலைத்திருக்கபால வடுகனைப்பெற்றாய்நாக
குண்டலியாயிமூல குண்டலிகுறைவிலாத
திண்டவப்புனிதர்வாழுந் திருநகரமர்ந்தசெல்வி
யண்டிலேனெனினுமெம்மை யாண்டகௌமாரிகண்ணே

வாருலாங்களபக்கொங்கை வனமுலையமுதமுண்டுன்
பேருலாமுலகமாகிப் பெருகியதன்றோவெந்தாய்
தேருலாநெடியவீதித் திருநகரமர்ந்தசெல்வி
யாருலாஞ்சடிலியெம்மை யாண்டகௌமாரிக்கண்ணே.

தாயிலாமழலைப்பிள்ளைத் தாங்குனரிலையாலென்று
நீயலாற்காக்குந்தெய்வம் நெடுங்கடலவனியுண்டோ
சேயிலாங்கலிகளோங்குந் திருநகரமர்ந்தசெல்வி
யாயிலோம்பருளிலெம்மை யாண்டகௌமாரிக்கண்ணே.

நீகரத்தந்தேயிந்த நெடுந்துயரலைகண்மோதுஞ்
சாகரமெனும்பொய்வாழ்க்கைதவித்தருட்கரையிற்சேர
சீகரமுறையிற்பெய்யுந் திருநகரமர்ந்தசெல்வி
யாகரமெனவென்னெஞ்ச மமர்ந்தகௌமாரிக்கண்ணே.

பாதளவரையுமண்டப் பாற்றினுமனந்தங்கற்பப்
போதளவிருந்துகாக்கும் புராதனிபுனிதவாமி
சீதளப்பாசலாறுட் டிருநகரமர்ந்தசெல்வி
காதளவிருந்தகண்ணி கன்னனூர்மாரிகண்ணே. (சு)

மாசுகவாரிமூழ்க மனந்துறந்தவருமண்ட
வாசிகளொடுமற்றோரும் வணங்குநின்பாதந்தந்தே
தேசிகஞ்செயும்பொன்மாடத் திருநகரமர்ந்தசெல்வி
யாசியீந்தருளாலெம்மை யாண்டகௌமாரிக்கண்ணே. ()

---

# லாலி.

---

வேதாந்த நிலயசுக விமலி பரநாரி
விஜயமிகு திரிசூல மேந்துகரவீரி
நாதாந்த போதவொளி யருளுமுபகாரி
ஞானசுட ராகிவரு நமதுகௌமாரி. (லாலி)

உலகாகி யுலகுயிர்க ளாகிநிறை நிமலி
யுத்தமி மனோன்மணி வராகிகர கமலி
பலகாலு முனதுபய சரணகமலமலி
பணியருளுங் கன்னபுர மாரியெனுமமலி (லாலி)

சுத்தபர சிவலலித லீலாவிநோதி
தொன்மறைக ளறியாது துன்றிடுமனாதி
மத்தமன முடையவர்க் கேட்டவதீதி
வடுகனென்னு மொருமகனை தந்தகனநீதி. (லாலி)

குமரிகலை ரயானந்தி செந்தரளவேணி
குறையோது மக்கடமக் கருளுதவுங்காணி
நமரினுனை யன்றில்லை வீடருளுமேனி
நம்பினேன் கன்னபுர மாரிமுத்தாணி. (லாலி)

---

## வேறு லாலி.

லாலி கௌமாரி லாலி - யானந்தி
லாலி சுந்தரியே லாலி
லாலி நாரணியே லாலி - பகவதி
லாலி முத்தம்மை லாலி.

சிங்கவாகனியே லாலி - சினகர
மெங்கு நின்றவளே லாலி
மங்களா கரியே லாலி - மரகத
வங்கவிங் கிலைதயே லாலி.

சுந்தரக்கனியே லாலி - யுலகுள
மந்திரப்பொருளே லாலி
அந்தரத்தருவே லாலி - ஜெயமிகு
விந்தையா மனேயே லாலி.

நாககங் கணியே லாலி - நவரச
பாகவிங்கதையே லாலி
யேகபூரணேயே லாலி - யரியசி
வோகமஹாமாரி லாலி.

---

## ம ங் க ள ம்.

—)(*)(—

ஜெயமங்களம் நித்திய சுபமங்களம்.

கன்னபுரமாரியுமை கமலவடிகளுக்கும்
காடுகொளெனும்பெரிய கபாலிதனக்கும்
மன்னவருமிருடியரும் வணங்குபதமலர்க்கும்
வடுகதேவனைப்பெற்ல மாதாவென்பவட்கும்
(ஜெயமங்களம்.)

ஆதொண்டைமண்டலியி னூரநடுமணியே
யார்ந்திருப்பபற்றா ரமர்ந்தவடனக்கும்
மூதண்டகூடம தடுக்குடையபுவன
முழுநிறைவுகொண்டமரு மூலகாரணிக்கும்
(ஜெயமங்களம்.)
பங்கயவிலோசன பராபரைதனக்கும்
பணகணசிரோரத்ன பாம்பணிபவட்கும்
மங்களாகாரமான மாதங்கிதனக்கும்
வரதாபயஸ்தமுள வாராகிதனக்கும்
(ஜெயமங்களம்.)
வேதாக்ரபோதநிலை விளங்கிடுபவட்கும்
வினையிலெனைபாழாது மீளவிடுபவட்கும்
மாதாவுந்தாதாவி மாமனோன்மணிக்கும்
மாமாரியாயெங்கும் வாழ்கின்றவட்கும்
(ஜெயமங்களம்.)

---

## வாழி.

வாழிசோபன மாமறையந்தணர்
வாழிசோபனம் வான்மழை யொண்புவி
வாழிசோபன மாதவமாதவர்
வாழிசோபனம் வாழ்வருன்மாரியே.

முற்றிற்று.

---

# வரலாறு.

இப்பாக்களில் உலககங்காணவீதிமருவுமென்பவை களை சிலேடையாக உயர்ந்தவர் மனமாகிய வீதியின் கண்ணே விளங்கு மெனவும். உலகு (அ) கங்காண வீதி யெனப் பிரித்து அகாரத்தைச் சாரியையாக்கி உயாந் தோருக்கு வாசஸ்தானமாகிய கங்காணவீதி யெனவுங் கொள்க.

கங்காணவீதி யென்பது, பண்டையோர்சர் சூத்தி ரனாகிய வேளாளன், கங்காணம் பெற்று வந்தமையால் அன்னோன் கங்காணியெனப் பெயர்பூண்டொழுகி அவ் வீதியின் கண்ணே தலைமையாக வாழ்ந் திருந்தனன், அதுகாரணம்பற்றி அவ்வீதிக்கு கங்காணவீதி யெனப் பெயர்போந்தபோலும்.

கங்காணம் - நெற்கலங்காத்தல்.

# விளம்பரம்.

இதனால் சகலருக்கும் அறிவிப்பது, சென்னை, சூளை, போஸ்டைச்சேர்ந்த கானத்தியப்பமுதலி வீதி, 17-18வது நெ. வீட்டில் ஸ்தாபித்திருக்கும் கோண்டன் அச்சுயந்திரசாலையில் இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, ஸ்கூலபுத்தகங்களும், அநேகவித மருந்துகளும், விசித்ரமான ரப்பர் ஸ்டாம்புகளும் ரப்பர் எழுத்துகளும், ஸ்டீரியோ பிலேட்டுகளும், ஜர்மன் சில்வர் நகைகளும், அத்தர் தினுசுகளும், டொப்பி தினுசுகளும், போஸ் ஹெயார்டு அளவுள்ள விநோதமாகிய பொட்டகிராப் படங்களும் தேவையானவர்கள் அரையணா வேலியில் அனுப்பி தங்கள் விலாசம் தெரிவித்தால் 2-அணா பெறும்படியான (2) கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

தேவையானவர்கள் அடியிற்கண்டிருக்கும் கம்பெனியாரவர்களுக்கு எழுதிபெற்றுக் கொள்ளலாம்.

டி, கோபால் அண்டு கோ.

கோள்டன் பிரஸ், சூளை போஸ்டு, மதராஸ்.